ஸ்ரீ உத்தர குருவாயூரப்பன்
ஆலய வரலாறு
தோற்றம் : 17.4.1975

கேரளாவில் இருப்பது போன்று ஆனால் சிறிய அளவில் நங்கை நல்லூரில் ஸ்ரீ குருவாயூரப்பன் ஆலயம் ஒன்று 1975 ஏப்ரல் 17ந் தேதி உருவாகியது. இது அவ்வூரில் 1969ல் இருந்து இயங்கி வந்த ஸ்ரீ குருவாயூரப்பன் ஆஸ்திக ஸாஜத்தின் முயற்சியால் எழுந்ததேயாகும்.

இது ஒரு சுத்த நாராயணாலயம் இதற்கான விதிமுறைகளின்படி முதலில் புதுஸ்ஸேரி விஷ்ணு நம்பூத்ரியின் உதவியுடன் ஒரு அஷ்ட மங்கள பிரச்னம் அமைக்கப்பட்டது. பிரச்னம் நடப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பாலாலயம் என்ற வகையில் ஸ்ரீ கணபதி, ஐயப்பன், பகவதி கன்யாகுமாரி, ஸ்ரீ குருவாயூரப்பன் ஆகிய தெய்வங்களின் திரு உருவப் படங்கள் ஒரு மண்டபத்தில் வைத்து ஆராதிக்கப்பட்டு வந்தன.

பிரச்னம் வெளியிட்ட உண்மைகள் மெய்சிலிர்க்க வைப்பவையாகும். இந்த இடம் ரத்னங்களும், சிறந்த ஸர்ப்பங்களும் நிறைந்த புண்யபூமி. இங்கு ஸ்ரீ குருவாயூரப்பன் ஸந்நிதி அமைத்துக் கொள்ளத் திருவுள்ளம் கொண்டுள்ளான். முதற்கண் இங்கு கேரளத்தில் உள்ளது போல் ஆனால் இங்குள்ள மனைக்கேற்ற சிறிய அளவில் ஸ்ரீ குருவாயூரப்பன் ஆலயம் கட்டப்பட்டது. மூன்று கிருத யுகலக்னங்கள் மேலும் ஆருட லக்னம், சிம்மம் ஸவர்ண பதன லக்னம், தனுஸ் உதய லக்னம் பிரச்னத்தில் எழுந்தாலும், வெற்றிலை எண்ணிக்கை பிரச்னம் நடந்து 1973 நவம்பரில் புதனின் கோசார நிலை இவற்றின் அடிப்படையிலும் மேலே உள்ள குறிப்பு எழுந்தது.

ஆலயம் தோன்றுவதற்குக் காரணம் இங்கு பில்வ மங்களர் தவம் செய்து ஸ்ரீ குருவாயூரப்பன் தரிசனம் பெற்றதால் அப்பன் சந்நதிக்கு முன் ஸ்ரீபில்வமங்களருக்கு ஒரு சந்நதி என்றும் பிரச்னம் கூறியது. அவர் குருவாயூரிலிருந்து கிளம்பி, அனந்த சயனம் (திருவனந்தபுரம்) கன்னியாகுமரி, மதுரை வழியாக வந்து இங்கு தரிசனம் பெற்றபோது ஒரு பசுவின் பாலைக் கறந்து நிவேதனம் செய்ததால் இக்கோயிலில் பால் ஆத்ய (முதல்) நிவேதமாகும் என்றும் தெளிவாயிற்று. அவர் வந்த வழி அப்பிரதட்சினம். இதனால் இங்கு அப்பிர தட்சிணம் உண்டு.

ஸ்ரீ குருவாயூரப்பன் கோயில் கேரள அமைப்பில் இருக்க வேண்டும். மற்றவை உள்ளூர் சம்பிரதாயப்படி இருக்கலாம். அப்பனின் திருவுருவம் கேரள குருவாயூரில் உள்ளதுபோல் ஆனால் ஏழு யவம் குறைவாக 111 யவம் (யவம் அங்குலத்தில் ஆறில் ஒரு பங்கு) விநாயகர், ஐயப்பன் ஒவ்வொருவரும் 65 யவம், பகவதி 75 யவம், பகவதியை பூஜகன் துர்காலஷ்மி சரஸ்வதியாகக் கண்டதால் பகவதிக்குச் சிலை உருவமில்லாமல் திருவிளக்கு ஜோதி போல் இருத்தல் வேண்டும். ஆகியவையும் பிரச்னத்தில் தெரிய வந்தது. ஐயப்பன் குருவாயூரில் மேற்கு முகம், இங்கு கிழக்கு முகமாக இருக்க வேண்டும். நவகிரஹங்கள் பிரச்னத்தில் பேரருளுடன் காணப்பட்டதால் அவர்களுக்கு அக்னி மூலையில் தனி சந்நிதி அமைய வேண்டும். பாலாலய பூஜா விதி உத்தமோத்தம விதி. அதே விதியைத் தான் இக்கோயிலில் கடைப்பிடிக்க வேண்டும். அம்முறையை அப்பூஜகனிடம் உபதேசம் பெற்ற சிஷ்யர்கள் தான் இங்கு நடைமுறையில் கொண்டு வரவேண்டும்.

சிலைகளுக்குக் கேரளாவில் திருத்தலாவில், கல் எடுத்துக் கேரளச் சிற்பிகளால் செய்யப்படவேண்டும். இக்கோயிலில் யானைக்கு பதிலாக குட்டித் தேரில் ஸ்ரீ வேலி பூஜைகளுக்குப் பின்னர் நடக்க வேண்டும். பூர்வம் என்றால் முதலில் எழுந்தது. உத்தர என்றால் பின்னால் எழுந்தது. அந்த வகையில் இது ஸ்ரீ உத்தர குருவாயூரப்பன் ஆலயமுண்டு.

“ பூர்வ குருவாயூரில் பிரார்த்தனை நிறைவேற்றுவது போலவே இங்கும் நிறைவேற்றி ஸ்ரீ குருவாயூரப்பனின் அருளைப் பெறலாம்”.

“ இக்கோயில் ஸமாஜத்தினரின் ஆலயமாகவே என்றும் திகழும் கோயிலில் ஆஸ்திக அன்பர்கள் பேராதரவினால் கோயிலில் பற்பல திருப்பணிகள் நிறைவேறியுள்ளன. இன்னும் பல திருப்பணிகளும் நடைபெற உள்ளன. இத்திருப்பணிகள் நிறைவேற ஸ்ரீ குருவாயூரப்பன் ஆஸ்திக ஸமாஜம் அங்கத்தினர்களின் நன்கொடைகளையே நம்பியுள்ளது. நன்கொடைகளை ஸ்ரீ குருவாயூரப்பன் ஆஸ்திக ஸமாஜம் நங்கைநல்லூர் என்னும் முகவரிக்கு அனுப்பி ஸ்ரீ குருவாயூரப்பன் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

அங்கத்தினர்கள்